வேலம்பாளையம் பேரூராட்சிக்கு கழிவுநீர்த் திட்டம்

*668 வின.—, திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் 15, வேலம்பாளையம் பேரூராட்சி மன்ற கழிவு நீர்த் திட்டத்திற்காக கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, வேலம்பாளையம் பேரூராட்சி கழிவுநீர் சாக்கடைத் திட்டத்திற்காக கடன் கேட்டு குடிநீர் வாரியத்திற்கு விண்ணப்பித்திருக்கிறதா? அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அப்படி நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தால் இனிமேலாவது நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதி முன்னேற்றத்திற்கு வழி செய்து கொடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே வேலம்பாளையம் பேரூராட்சி மன்றத்திலிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை. அது குறித்து தகவல் தரப்படுமானால், பிறகு இதைபற்றி ஆராயப்படும்.

காட்டுப்புத்தூர் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்

*669 வின.— திரு. சி. க. வடிவேலு: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டம், காட்டுப்புத்தூர் பேரூராட்சிகு தண்ணீர் விஸ்தரிப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அத்திட்டம் எப்போது துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ஆய்வு வேலைகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்படும். ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்ட பின்னர் இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

திரு. சி. க. வடிவேலு : தலைவர் அவர்களே, காட்டுப்புத்தூர் பேரூராட்சிக்கு தண்ணீர் விஸ்தரிப்பு திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டது, அதில் அரசாங்கத்தினுடைய மானியம் எவ்வளவு? அந்தத் திட்டம் எப்போது துவங்கும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மதிப்பீடு செய்வதற்காகத்தான் இப்போது ஆய்வு செய்யப்படுகிறது. 15 ஆயிரம் ரூபாயை 15—11—71-ல் அந்தப் பஞ்சாயத்து ஆய்வுத் தொகையாகச் செலுத்தியிருக்கிறது. ஆய்வு வேலைகள் நடைபெற்று முடிந்தவுடன் திட்டத்தின் மதிப்பீடு அறிவிக்கப்படும்.